அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர் - 641018

பி. ஏ தமிழ் – முதலாம் - ஆண்டு
இலக்கணம் – நன்னூல் - சொல்
இரண்டாம் பருவம் - 18BTA23C

அலகு - 3 பொதுவியல்

பெயர் : மு. ஜோதி
துறை : தமிழ்த்துறை
அலைபேசி : 9487193006

# பொதுவியல்

**ஒன்றொழி பொதுச்சொல்**

இருதிணை ஆண்பெணுள் ஒன்றனை ஒழிக்கும
பெயரும் வினையும் குறிப்பி னான

உயர்திணையிலும்அஃறிணையிலும் ஆண்பாலைak; பெண்பாலையும் சேர்த்து உணர்த்தப் பொதுச்சொற்கள் (மக்கs;> பெற்றங்கள்) உள்ளன. அவை பொது நிலை நீங்கித் தொடரில் வரு குறிப்பால் ஒரு பாலை உணர்த்தும்

**உயர்திணை**

1. **ngண்பலர் பால் நீக்கி ஆண்பலர்பால்**

***ஆயிரம் மக்கள் போர் செய்யப் போயினர்***

இச்சான்றில் வரும் மக்கள் என்னும் பெயரும் போயினர் என்னு வினை முற்றும் ஆண் பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாகிய பலர்பான உணர்த்தும்

இத்தொடரில் போர் என்னும் சொல் வருகின்றது. போர்புரிதல் ஆண்பாலுக்கு உரிய தொழில். எனவே இத்தொடர் பெண்பலர் பாலை நீக்கி ஆண்பலர்பாலைக் குறிப்பால் உணர்த்திற்று

2. **ஆண்பலர் பால் நீக்கிப் பெண்பலர்பால்**

பெருந்தேவி கருஉயிர்த்த கட்டிலின் கீழ் நால்வர் மக்கள் உளர் இத்தொடரில் மக்கள் உளர் என்பது பொதுவாகப் பலர்பாலை உணர்த்தும். குழந்தை பெற்ற என்னும் பொருள் தரும் கரு உயிர்த்த என்னும் குறிப்பால் மக்கள் உளர் என்பது பெண் பலர் பாலை உணர்த்தும். எனவே, இத்தொடர் ஆண் பலர்பாலை நீக்கிப் பெண்பலர்பாலை உணர்த்திற்று

**அஃறிணை**

அஃறிணையிலும் ஆண்பால் (களிறு, சேவல்) பெண்பால் (பிடிபேடை என்னும் பாகுபாடு இருக்கின்றது. இருப்பினும் அவை களிறு வந்தது; பிடிவந்தது எனப்பால் காட்டாமல் ஒன்றன் பால் வினை முற்றையே பெறும். தேவையான இடங்களில் அவை ஆண்பால் பெண்பால் காட்டும் தன்மை பிரித்துச் சொல்லப்படும்.

**பெண் பலவின்பால் நீக்கி ஆண் பலவின்பால்**

*இப்பெற்றங்கள் உழவு ஒழிந்தன*

இத்தொடரில் வரும் பெற்றங்கள் என்னும் சொல் பொதுவாக மாடுகள் என்னும் அஃறிணைப் பலவின் பாலை உணர்த்தும் சொல்லாகும். ஒழிந்தன என்பதும் பொதுவான பலவின்பால் வினை முற்றாகும். இத்தொடரில் வரும் உழவு என்னும் தொழிலை உணர்த்தும் பெயரால் பெற்றங்கள் காளைகள் அல்லது எருதுகள் என்னும் அஃறிணை ஆண்பாலைக் குறிக்கும். எனவே இத்தொடர் அஃறிணையில் பெண்பலவின் பாலை நீக்கி ஆண்பலவின் பாலை உணர்த்திற்று

**ஆண் பலவின் பால் நீக்கிப் பெண் பலவின்பால்**

*இப்பெற்றங்கள் பால் சொரிந்தன*

இத்தொடரில் பால் சொரிதல் என்னும் குறிப்பால் பெற்றங்கள் என்பது பால்கறக்கும் பெண்பலவின் பாலைக் குறிக்கும். எனவே இத்தொடர் அஃறிணையில் ஆண்பலவின் பாலை நீக்கிப் பெண் பலவின் பாலை உணர்த்திற்று

**உருபும் வினை விகுதியும் எதிர்மறையிலும் திரியாமை**

**உருபும் வினையும் எதிர்மறுத்து உரைப்பினும்**
**திரியா தத்தம்ாற்று உருபின் என்ப**

ஒன்று முதல் எட்டு வரை உள்ள வேற்றுமை உருபுகளும் தன்மை, முன்னிலை, படர்க்கை வினையிலும் எதிர்மறையாகச் சொல்லும் போதும்

உருபுகளும் விகுதிகளும் வேறாகத் திரியாமல் அப்படியே வரும் ஒரு தொழிலுக்கு உடன்பாடு, எதிர்மறை என இரு பொருள் உண்டு. செய் என்னும் தொழிலுக்குச் செய்தல் என்னும் உடன்பாட்டுப் பொருளும் செய்யாமை என்னும் எதிர்மறைப் பொருளும் உண்டு எனவே உடன்பாட்டில் சொன்னாலும் எதிர்மறையில் சொன்னாலும் உருபுகளும் வினைமுற்று விகுதிகளும் திரியா.

| வேற்றுமை | உடன்பாடு | எதிர்மறை |
|---|---|---|
| 1 வே. | சாத்தன் வந்தான் | சாத்தன் வாரான் |
| 2வே - | குடத்தை வனைந்தான் | குடத்தை வனையான் |
| 3 வே. | வாளால் எறிந்தான் | வாளால் எறியான் |
| 4 வே. | புல்லர்க்குக் கொடுத்தான் | புல்லர்க்குக் கொடான் |
| 5 வே. | நிலையின் நீங்கினான் | நிலையின் நீங்கான் |
| 6 வே. | பொருளினது உண்மை | பொருளினது இன்மை |
| 7வே - | தீயர்கண் சேர்ந்தான் | தீயர்கண் சேரான் |
| 8வே - | சாத்தா போ | சாத்தா போகேல் |

**இடைப் பிற வரல்**

தொடர்கள் நெகிழ்வுத் தன்மை உடையவையாக இருப்பதால் இடையில் வேறு சொற்களும் வரலாம். அவன் வந்தான் என்னும் எழுவாய்த் தொடரின் இடையில் அவன் நேற்று வந்தான் என நேற்று என்னும் சொல்லையும் சேர்க்கலாம். இப்படிப் பிற தொடர்களிலும் இடையில் பிற சொற்களும் வரலாம்

**உருபு முற்று ஈரெச்சம் கொள்ளும்**
**பெயர்வினை இடைப்பிற வரலுமாம் ஏற்பன**

வேற்றுமை உருபு பெற்ற தொடர்களிலும் வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் போன்றவை பெற்ற தொடர்களிலும் அவற்றுக்கு இடையே பிற சொல்லும் வரலாம்

**இருதிணைப் பெயர், வினை பொதுமை நீங்குதல்**

இருதிணைக்கும் பொதுவான பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் தொடர்ந்து வரும் பெயர், வினையால் பொதுமை நீங்கி உயர்திணை அல்லது

அஃறிணையை உணர்த்தும் சாத்தன் இருதிணைப் பொது பெயர் சாத்தன் இவன் சாத்தன் இது என்னும் போது முறையே உயர்திணை, அஃறிணை என்பது அறியப்படும். இவ்வாறே சாத்தன் வந்தான் உயர்திணை சாத்தன் வந்தது அஃறிணை என வினை முற்றில் அறியப்படும்)

**பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்**
**மேல்வரும் சிறப்புப் பெயர்வினை தாமே.**

இருதிணைகளுக்கும் பொதுவாக உள்ள பெயர் வினைச்சொற்கள் திணைபால் உணர்த்தும் பெயர் வினைச் சொற்களைத் தொடரில் பெறும்போது தெளிவாகத் திணை பால் உணர்த்தும்

**தொகை நிலைத்தொடரின் வகைகள்**

**வேற்றுமை வினை பண்பு உவமை உம்மை**
**அன்மொழி என அத்தொகை ஆறு ஆகும்**

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித்தொகை எனத் தொகைநிலைத் தொடர்கள் ஆறு வகைப்படும்

**ஏழு வகையான வழுக்கள்**

**திணையே பால் இடம் பொழுது வினா இறை**
**மரபாம் ஏழும் மயங்கினாம் வழுவே**

உயர்திணை, அஃறிணை என்னும் இருதிணைகள், ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் ஐம்பால்கள், தன்மை, முன்னிலை படர்க்கை என்னும் மூன்று இடங்கள், இறப்பு நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங்கள், வினா, விடை, மரபு ஆகிய ஏழும் தொடரில் முறையாக அமைய வேண்டும். அவ்வாறு வராமல் மாறின் வழு எனப்படும் தவறு ஆகும்.

1. **திணை வழு அவன் வந்தது**

இத்தொடரில் எழுவாய் அவன் உயர்திணை. பயனிலை வந்தது அஃறிணை உயர்திணை எழுவாயும் அஃறிணைப் பயனிலையும் மயங்கின. எனவே திணை வழு

**2. பால் வழு அவன் வந்தாள்**

இத்தொடரில் எழுவாய் அவன் ஆண்பால், பயனிலை வந்தாள் பெண்பால்; ஆண்பால் எழுவாயும் பெண்பால் பயனிலையும் மயங்கின; எனவே பால் வழு

3. இட வழு யான் வந்தான்

இத்தொடரில் எழுவாய் தன்மை ஒருமை; பயனிலை வந்தான். தன்மை இட எழுவாயும் படர்க்கை இடப் பயனிலையும்மயங்கின. எனவே இட வழு.

**4.கால வழு நாளை வந்தான்**

இத்தொடரில் நாளை என்பது எதிர்காலம் உணர்த்தும்; வந்தான் என்பது இறந்த காலம் உணர்த்தும். எதிர்காலமும் இறந்த காலமும் மயங்கி எனவே கால வழு

**5. வினா வழு கறக்கின்ற எருமை பாலோ சினையோ?**

சுறக்கின்ற பால் மாட்டைச் சினையா? எனக் கேட்பது வினா வழு

**6. விடை (இறை) வழு பட்டுக் கோட்டைக்கு வழி எது?**

என வழி கேட்கும் போது கொட்டைப் பாக்கு எட்டுப் பணம் என்பது விடை வழு

**7. மரபு வழு யானையைச் செலுத்துபவனை இடையன் என்பது**

யானையைச் செலுத்துபவன் பாகன், இடையன் என்பது மரபு வழு.

**திணை வழுவமைதி**

**உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் ஆறும்**
**அதனொடு சார்த்தின் அத்திணை முடிgpன**

உயர்திணை எழுவாயைத் தொடர்ந்து வரும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறு அஃறிணைப் பெயரும் எழுவாயாக நின்று முன்னுள்ள எழுவாயின் பயனிலையையே தாமும் கொள்ளும்

திணை பால் மரபு வழுவமைதி

எழுவாயாக வரும் பெயர்களும் பயனிலையாக வரும் முற்றும் திணை, பால், எண் இடம் மயங்காமல் வர வேண்டும். உயர்திணை அ∴றிணைப் பெயர்கள் விரவி வரும் போது மாறி வருவதை மரபு வழுவமைதியாகக் கொள்ள வேண்டும்.

திணை பால் வழுவமைதி

**உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறYpனும்**
**இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே,**

மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, சினம், பழிப்பு என்னும் செயற்பாட்டால் பால், திணை மயங்கி வந்தாலும் வழுவமைதியாகக் லாம். கொள்ளலாம்.

**பால் இட வழுவமைதி**

**ஒருமையின் பன்மையும் பன்மையின்**
**ஒருமையும் ஓரிடம் பிற இடம் தழுவலும் உளவே**

ஒருமைப் பாலில் பன்மைப்பால், பன்மைப் பாலில் ஒருமைப் பால் என மாறி வரும் பால் வழுவமைதியும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களில் ஓர் இடம் இன்னோர் இடமாக மாறிவரும் இடவழுவமைதியும் என இருவகையில் அமையும்.

**பொருள்கோளின் பெயர் - தொகை**

**யாற்று நீர் மொழிமாற்று நிரல்நிறை விற்பூண்**
**தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்டு**
**அடிமறி மாற்று எனப் பொருள்கோள் எட்டே**

பொருள்கோள் என்பது யாற்றுநீர், மொழி மாற்று, நிரல்நிறை விற்பூண், தாப்பிசை, அளைமறி பாப்பு, கொண்டுகூட்டு, அடிமறிமாற்றுஎன்னும் பெயரில் எட்டு வகையாக அமையும்.